RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.54392/ijmrd223S124

# Education that Elevates Society

## சமுதாயத்தை உயர்த்தும் கல்வி

**K.M. Panbarasi [a,*]**

[a] Department of Tamil, Mahalakshmi Arts and Science College, Paruthippattu, Avadi-600071, Tamil Nadu, India.

*Corresponding author Email: panbarasikm@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S124

Received: 13-04-2022; Revised: 05-07-2022; Accepted: 12-07-2022; Published: 19-08-2022

**Abstract:** Education is what makes man. Social changes take place only through education. Education is the most important factor in the development of an improved society. In ancient Tamil Nadu, there have been changes in the teaching system of education, accountant's school, sangam period, Vedic education, Christian priests, Macaulay education system, today's education system, computer education, education technology, modern teaching methods, media role in teaching, television, internet, postal education, open universities and distance education, the role of the government. This article deals with the changes in learning in teaching from ancient times to this period.

**Keywords:** Education, Computer, Media, Astronomy

**Language:** **Tamil**

## முன்னுரை

கல்வி மனித வாழ்க்கையை வளம் பெறச் செய்கிறது. ஒருவன் தான் கற்ற கல்வியின் இன்பத்தை உணர்ந்தானாயின் அவன் மீண்டும் கற்பதை விரும்புவான். இது கல்வியின் பண்பாக கருதப்படுகிறது. மனிதன் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கல்வி அருமை பெருமையை ஆய்ந்து அறிய அறிய நமக்கு ஆர்வம் மேலிடும்.

கல்வி என்பதன் வேர்ச் சொல்லான" "கல்லுதல்" "தோண்டுதல்" என்னும் பொருளை அளிப்பதாக அமைந்துள்ளது. அதாவது மனிதனிடம் புதைந்து கிடக்கும் ஆற்றல்களையும் திறன்களையும் வெளிக்கொணர்ந்து மலர்ந்திட செய்யும் செயலே கல்வி எனக் கொள்ளப்படுகிறது. இதைத் தான் சுவாமி விவேகானந்தர், கவியரசர் தாகூர், ப்ரோபைல், ரூஸோ முதலிய கல்வி தத்துவ அறிஞர்கள் வற்புறுத்துகிறார்கள் (Nagarajan et al., 2009).

கல்வி என்பது மனிதனிடம் இயற்கையாக உறைந்துள்ள தெய்வீகமான முழுமைத் தன்மையை வெளிப்படுத்துவதாகும் என்கிறார் சுவாமி விவேகானந்தர். "கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்கிறது நாலடியார்.

## பண்டைத் தமிழகத்தில் கல்வி

பண்டைத் தமிழகத்தில் அரசு பள்ளிகளை நடத்தியதாக அறிய முடியவில்லை. பண்டைய தமிழகத்தின் ஒவ்வொரு கிராமங்களிலும் சிற்றூர்களிலும் தனியார் நடத்திய திண்ணைப் பள்ளிகள் இருந்தன. மரத்தடி, ஆசிரியர் வீடும், ஊர் அம்பலமும் பள்ளிகளாக விளங்கின (Dhatchanamoorthi, 2005).

பண்டைக் காலத்தில் கல்விக்கென தனித்துறை இல்லை. மக்கள் தனிப்பட்ட முறையில் ஆசிரியனுக்குப் பொருள் கொடுத்தும், தொண்டு செய்தும் கற்று வந்தனர்.

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"

என்று ஆரியப்படை கடந்தநெடுஞ்செழியன் பாடியிருக்கிறார். மடங்கள் கல்வி நிலையங்களாகவும் நூல்களைப் பாதுகாத்து வைக்கும் சரஸ்வதி பண்டாரங்களாகவும் இருந்தன.

## கணக்காயர் பள்ளி

அக்காலத்தில் பெரும்பாலும் ஒவ்வொரு ஊரிலும் கணக்காயர் பள்ளி இருந்தது.

"கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்க றுக்கும்

மூத்தோரை இல்லா அவைக்களனும் - பார்த்துண்ணும்

தன்மை யிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்

நன்மை பயத்தல் இல" - என்கிறது திரிகடுகம்.

கணக்காயர் பள்ளி பிற்காலத்தில் திண்ணைப் பள்ளிக் கூடமாகச் சிறுத்தது. கணக்காயனிடம் கற்போனுக்கு மாணி, சட்டன், ஓலைக் கணக்கன் என்றும்; ஆசிரியரிடம் கற்போனுக்கு மாணவன், கற்றுத் சொல்லி, மழுபுலவன் என்றும், குரவனிடம் கற்போனுக்குக் கேட்போன் என்றும் பெயர் (Devaneya Pavanar, 2017). கற்கும் இடங்கள் பள்ளி என்றும் போதும் பள்ளி என்றும் கல்லூரி என்றும் பெயர்பெற்றன. சமண பௌத்த மதத்தினர் தம் பள்ளிகளில் இருந்து கொண்டு கல்வி அளித்தனர். இதனாலேயே பள்ளி என்னும் சொல் கல்வி நிலையத்தைக் குறிப்பதாயிற்று.

## சங்க காலம்

சங்க காலத்தில் கற்றறிந்தார் கூடி சிந்திக்க வாய்ப்பிருந்தது. சங்கம் அதற்காக அமைந்ததே ஆகும். பட்டிமன்றங்கள் வைத்து அறிஞர்கள் பல பொருள்களைப் பற்றி விவாதிப்பதற்கு சான்றுகள் உண்டு.

"பல்கேள்வித் துறைபோகிய

தொல்லாணை நல்லாசிரியர்

உறழ்குறித் தெடுத்த உருகெழு கொடியும்"

## பதினெண் கீழ்க்கணக்கு

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நீதி நூல்கள் அனைத்தும் கல்வி பற்றிய செய்திகளைக் கூறுகின்றன

“நெஞ்சத்து நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்

கல்வி அழகே அழகு"

எனக் கூறுகிறார் சமணமுனிவர்.

‘நான்மணிக்கடிகை 'தனக்குப்பாழ் கற்றறி வில்லா உடம்பு’ என்றும்,

'மக்களை கல்லாமல் வளர விடுவது தீது’ என்றும் கூறுகிறது (Nagarajan & Seetharaman Deva 2009).

## வேதகால கல்வி

குருவின் இல்லத்தில் கல்வி அளிக்கப்பட்டது. பெண் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. சூத்திரர்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது.

மாணவர்கள் ஆசிரியருக்குப் பணி விடை செய்து, உடன் வாழ்ந்து. கல்வி பயின்றனர். வாய்மொழி விளக்கம், மனனம் ஒப்புவித்தல், செயல்முறைப் பயிற்சி ஆகியவை கற்றல்-கற்பித்தல் முறைகளாகத் திகழ்ந்தன. விவாத அரங்கங்களுக்கு மாணவர்கள் ஆசிரியருடன் சென்று வந்தனர்.

### கிறித்தவ பாதிரியார்கள்

கிறித்தவப் பாதிரியார்கள் பள்ளிகளை நடத்தினர். இதனால் எளிய மக்கள் பயன் பெற்றனர். ஆங்கிலேயர் காலத்தில் தான் முறையான பள்ளிகள் தோன்றின.

### மெக்காலே கல்விமுறை

லார்டு மெக்காலேவின் மூலம் மனப்பாடக் கல்வி முறை தோன்றியது. இக்காலக் கல்வியின் மற்றொரு பெயர் குமாஸ்தா கல்வி முறை எனலாம்.

### இன்றைய கல்வி முறை

இன்றைய கல்வி மாணவர் மையக் கல்வியாக உள்ளது. குருகுல கல்வி ஆசிரியர் மையக் கல்வியாக இருந்தது.

### கணினி மூலம் கல்வி

கணினி பற்றிய தகவல்களை வெறும் ஏட்டளவில் அறிந்து கொள்வது கணினி பற்றிய அடிப்படை அறிவு என்று தற்போது கருதப்படுவதில்லை. கணினி மூலம் கல்வி கற்றுத் தரப்படுகிறது.

கணினி பற்றி நுட்பமாக அறிந்து கொண்டு அதன் பல்வகை பயன்பாட்டிலும் தாமே பங்கேற்கும் ஆற்றலைப் பெறுதலோடு கணினி வன்பொருட்களையும் மென்பொருட்களையும் தயாரித்தல் போன்றவையும் தொழில்சார் படிப்பில் அடங்கும்.

### கல்வியின் தொழில்நுட்பம்

"கற்பித்தலில் அறிவியல் கோட்பாடுகளைப் பயன்படுத்துதலே கல்வி நுட்பவியல் என்கின்றனர் "ஸ்க்கின்னர் காக்னே (Nagarajan et al., 2009).

### நவீன கற்பித்தல் முறைகள்

மொழிப் பயிற்றாய்வுக் கூடம் (Language Laboratory), சுற்றுப் பூர்த்தியான தொலைக்காட்சி அமைப்பு, (Closed Circuit Television), ஒளிப்பேழை (Video-Cassettee) குறுந்தகடு) விண்ணரங்கம் (Tele-Conferencing), கணினி துணை கொண்டு கற்பித்தல் (Computer Assisted Instruction) போன்றவை கல்வி தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்பிக்கும் முறைகளாக அமைந்துள்ளன.

### கல்வி கற்பித்தலில் ஊடகங்களின் பங்கு

நாளிதழ்கள், வானொலி, தொலைக்காட்சி போன்றவை கல்வி கற்பித்தலில் பயன்படுகின்றன. இவற்றின் மூலமும் கல்வி வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

### தொலைக்காட்சி

தொலைக்காட்சி மூலம் கற்பித்தல் நல்ல முறையில் நடத்தப்படுகிறது. கொரோனா கால கட்டத்தில் கல்வி தொலைக்காட்சியில் பாடங்கள் நடத்தப்படுகிறது. இதன் மூலம் மாணவர்கள் பயனடைகின்றனர்.

### இணையம்

இணையத்தின் மூலம் கொரோனா காலகட்டத்தில் பாடங்கள் எடுக்கப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்கள் இருக்கும் இடத்திலிருந்தே பாடங்களைக் கற்கின்றனர்

### அஞ்சல் வழி கல்வி

வேலைக்குச் சென்றும் வீட்டில் இருந்தும் அஞ்சல் வழி மூலம் படித்து பட்டங்கள் பெறலாம்.

### விண்ணரங்கம்

தொலைதூரத்தில் இருப்பவர்கள் நேரிடையாக தொடர்புகொண்டு தங்களுக்குள் கலந்துரையாடல் நிகழ்த்துவதையே விண்ணரங்கம் என்கிறோம். இம்முறை தொலைதூரத்தில் இருப்பவர்கள் தங்களுக்குள் தொடர்பு கொள்வதற்கு மேற்கொள்ளும் பயணத்திற்கான செலவு, காலவிரயம் போன்ற பிரச்சனைகளில் இருந்து விடுபடும் வகையில் தீர்வாக அமைந்துள்ளது "காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்" என்றார் பாரதியார்.

### திறந்தநிலை பல்கலைக்கழகங்களும் தொலைதூர கல்வியும்

திறந்தநிலை பல்கலைக்கழகங்களும், தொலைதூர கல்வியும் அனைவருக்கும் உயர்கல்வி கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே இவை உருவாக்கப்பட்டன. நன்கு எழுதவும் படிக்கவும் தெரிந்த யார் வேண்டுமானாலும் உயர்கல்வி கற்கலாம் என்ற நிலை இன்று உருவாக திறந்தநிலை பல்கலைக் கழகங்களும் தொலைதூர கல்வி நிறுவனங்களுமே காரணங்களாகும் (Kalaiselvi, 2008).

### அரசின் பங்கு

அரசு கல்விக்காக பல சலுகைகளை அளித்து வருகிறது. இலவச கல்வி, மதிய உணவுடன் கல்வி, சீருடை புத்தகங்கள், மிதிவண்டி போன்றவற்றை மாணவர்களுக்கு வழங்குகிறது, பள்ளிப் படிப்பு முதல் கல்லூரி வரை இலவசக் கல்வியை அரசு வழங்கி வருகிறது, மாணவர்களுக்கு உதவித் தொகையையும் வழங்குகிறது, பெண் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது (Nagarajan et al., 2009).

### முடிவுரை

கல்வி என்பது குழந்தை மற்றும் மனிதனின் உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றின் சிறப்பானவற்றை எல்லாம் முழுமையாக வெளிக் உணர்வதாகும் என்கிறார் மகாத்மா காந்தியடிகள். கல்வி என்பது வாழ்நாள் முழுவதும் தொடர்வதோடன்றிப் பிறவிதொறும் தொடர்ந்து பயனளிக்க வல்லது என்று கருதினார் வள்ளுவர். அனைவருக்கும் கல்வி கிடைக்கும் சமுதாயத்தை உருவாக்குவோம். கல்வியைப் பெற்று வளமான வாழ்வு பெறுவோம்.

## References

Devaneya Pavanar, G., (2017) Pandaith Tamil Nagarimum Panpadum, Gowra Pathippagam, Chennai, India.

Dhatchanamoorthi, A., (2005) Thamizhar Nakarigamum Panpaadum, Ainthinai Pathippagam, Chennai, India.

Kalaiselvi, V., (2008) Kalviyal Sirappu Ithal, Sanjeev Publications, Erode, India.

Nagarajan, K., Natarajan, S., Seetharaman Deva., (2009) Valarnthu Varum India Samuthayathil Kalvi, Ram Pathippagam, Chennai, India.

Nagarajan, K., Seetharaman Deva., (2009) Kalvi Puthumaikkalum Melanmaikalum, Ram Pathippagam, Chennai, India.

**Funding**

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

K.M. Panbarasi Education that Elevates Society, ndian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 121-125 DOI: https://doi.org/10.54392/ijmrd223S125